ஔவை - பாரதி

ஔவை வாழ்ந்தகாலம் உறுதியாக தெரியவில்லை இருந்தாலும், ஆராய்ச்சியாளர்கள் கருத்துப்படி மூன்றாம் BCE காலத்தில் இருந்ததாகவும் அல்லது 8-9 CE காலத்தில் அல்லது 12 CE காலத்தில் இருந்தார் என்று நம்பப்படுகிறது.

புறநானூறு காலம்

விநாயகர் அகவல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி

கம்பர், ஒட்டக்கூத்தர் வாழ்ந்த காலம்.

ஔவை எழுதிய நூல்களில் ஆகச்சிறந்தது ஆத்திசூடி.

பாரதி வாழ்ந்த காலம்

19/20 ஆம் நூற்றாண்டு (1882-1921)

ஔவையால் ஈர்க்கப்பட்டு பாரதி புதிய ஆத்திசூடி எழுதினார் என்று கூட கருதலாம். ஆனால் இருவரின் எழுத்திலும் அவர்கள் வாழ்ந்த காலத்தின் தாக்கம் தெரிகிறது.

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டு பாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்

உருவகத் தானே உணர்ந்துணராது

பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்

ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவோம்.

அதனிலை கண்டார் அல்லலை ~~கண்டார~~ அகற்றினர்.

அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

ஆத்திசூடியால் கடவுள்வாழ்த்தில் ஒளவை விநாயகரைப் போற்றுகிறார்.

ஆனால் பாரதியோ சிவன், திருமால், மகமது, ஏசு என்ற எல்லா முக்கிய கடவுளரையும் போற்றி அதற்குமேல் கடவுள் நம்பிக்கை என்ன என்பதை வலியுறுத்துகிறார்.

# ஔவையின் ஆத்திசூடி

வலியுறுத்தி உரைப்பது அறம், கல்வி, ஒழுக்கம், தொழில், கடவுள் நம்பிக்கை, நற்சேர்க்கை தானம் மற்றும் ஒற்றுமை.

உ.மா:

1. அறம் செய விரும்பு
2. பருவத்தே பயிர் செய்
3. வஞ்சகம் பேசேல்
4. இளமையில் கல்
5. கைவினை கரவேல்
6. சான்றோர் இனத்திரு
7. சேரிடம் அறிந்து சேர்
8. தெய்வம் இகழேல்
9. திருமாலுக்கு அடிமை செய்
10. நாடு ஒப்பன செய்

ஒளவை ஆத்திசூடியில் உள்ள சில கருத்துக்களை கொன்றைவேந்தன், வாக்குண்டாம் மற்றும் நல்வழியிலும் குறிப்பாகக் கூறியிருக்கிறார்.

உ-ம்:

ஆசூ 26: இளவம் பஞ்சில் துயில்

கொ.வே 76: மெத்தையில் படுத்தல் நித்திரைக்கழகு

ஆசூ 57: திருமாலுக்கு அடிமை செய்

ஆசூ ~~கொ.வே~~ 61: தெய்வம் இகழேல்

கொ.வே 89! வையந் தோறும் தெய்வம் தொழு.

ஆனால் பெண்களைப் பற்றி அவர் கூறியிருப்பது அவர் வாழ்ந்த

காலத்தை பிரதிபலிக்கிறது.

ஆசு : தையல்சொல் கேளேல்
63 பெண் (மனைவி) சொல்

கொ.வே : பேதைமை என்பது மாதர்க்கு
66 அணிகலம்.
அறியாதவர் போல்

## பாரதியின் ஆத்திசூடி

உறுதியாகக் கூறுவது அச்சமின்மை, ஆண்மை, ஈகை, கற்றல், கூட்டுறவு, கைத்தொழில், வீரம், கடவுள் வாழ்த்து மற்றும் புதினம்.

உ.ம் :
1. அச்சம் தவிர்
2. உடலினை உறுதிசெய்
3. ஏறுபோல் நட
4. ஒற்றுமை வலிமையாம்
5. கற்றது ஒழுகு

6. கூடித் தொழில் செய்

7. சூரரைப் போற்று

8. ~~ஞாயிறு~~ ஞாயிறு போற்று

9. நையப் புடை

10. நேர்படப் பேசு

பாரதி சக்திதாசன்.

பாரதி பாஞ்சாலிப் பிரியன்

அதனால்தான் என்னவோ (தையலை

உயர்வு செய்) என்கிறார்.

யாமறிந்த மொழிகளிலே

தமிழ் மொழிபோல் இனிதானது

எங்கும் காணோம் என்று தமிழையே

தனது மூச்சாகக் கொண்டு 39 ஆண்டுகளே

இவ்வுலகில் வாழ்ந்த தமிழ் உலகை

இன்றளவும் ஆனந்த வெள்ளத்தில்
திளைக்கச் செய்யும் மகாகவி பாரதி.

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல் — 668

என்ற வள்ளுவர் வரிகளுக்கேற்ப
சுதந்திரத் தீயை பரப்பிய பெருமனிதர்

அச்சமே மடமை
அச்சமில்லாமையே அறிவு
அச்சத்தை அழித்து விட்டால்
சாவும் அங்கு அழிந்து போகும் என்று
கூறி நம் மனதிற்கு உறுதி ஏற்றியவர்
பாரதி.

பொருள் ஒரு பொருட்டே
அல்ல என்ற வேதவாழ்க்கை வாழ்ந்தவர்
பாரதி.

பல மொழிகளை அறிந்த வேதம், சாத்திரம், இசை, இலக்கியம், இதிகாசம், தத்துவம், உலக சரித்திரம் என்று அவர் எடுக்காத பகுதியே இல்லை எனலாம்

சாதாரண மொழியில் அசாதாரணமான கருத்துக்களை நம் இதயத்தில் ஏற்றியவர்.

உள்!
நெஞ்சில் உறுதிவேண்டும்,
வாக்கினில் இனிமை வேண்டும்,
கனவு மெய்பட வேண்டும்,
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
என்று பசு மரத்தாணி போல் மனதில் பதியவைத்தவர்.

இன்னமும் பாரதி உலக மக்களை இணைக்கும் சக்தியாக நான் உணர்கிறேன்.

ரஷ்ய புரட்சி, பிஜி தீவில் பெண்கள் துயரம், மதங்களை கடந்த ஆன்மீகம் என்று முழு வீச்சில் அவரது பார்வை இருந்தது.

இந்துக்களுக்கு எப்படி கீதையோ
இஸ்லாமியருக்கு எப்படி குரானோ
கிறுஸ்துவருக்கு எப்படி பைபிளோ

அதுபோல் தமிழர்கள் ஆகிய நமக்கு கையில் இருக்க வேண்டிய புத்தகம் பாரதியுடையது.

விலகாத வறுமையிலும்
இல்லாமையிலும் வேத வாழ்க்கை

11

வாழ்ந்தவர் என்று ஸ்ரீ அரவிந்தர்
பாரதியை குறிப்பிடுகிறார்.

இந்த இரண்டு மாபெரும்
அறிஞர்களும் நமக்கு விட்டுச்சென்றிருக்கும்
பொக்கிஷங்கள் காலத்தால் அழியாதது.
இந்த பொக்கிஷங்களைக் கட்டிக்காத்து
அதன்வழி நாம் நமது சந்ததியினரையும்
வழிநடத்துவதே நாம் அவர்களுக்கும்
அவரைப் போன்ற மாமனிதர்களான
கம்பன், இளங்கோ, வள்ளுவர்
போன்றோர்க்கும் நாம் செய்யும்
காணிக்கையாகும்

கம்பரின் கருத்தை
படிப்பதற்கும், அனுபவிப்பதற்கும்,

பேசுவதற்கும், நாடகமாக இயற்றுவதற்கும்
இன்று ஊருக்கொரு கம்பன் கழகம்
என்று அமைப்புகள் இருக்கின்றன.

ஆனால் ஒரு பாரதியையும்
ஒரு ஔவையையும் நினைப்பதற்கும்,
படிப்பதற்கும், போற்றுவதற்கும்
வாய்ப்புகள் குறைவே அந்த குறையை
இந்த விழா நிறைவு செய்கிறது.

— நடனகோபால்
06-11-2025